**4. பொய் சொல்லும்படி சாமுவேலுக்குத் தேவன் ஆலோசனையளித்தாரா?**

தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணுவதற்காகத் தேவன் சாமுவேலை அனுப்பும்போது, சவுல் தன்னைக் கொன்றுவிடுவான் என்று சாமுவேல் பயப்பட்டான். அப்பொழுது ஒரு காளையையும் எடுத்துக்கொண்டுபோய், கர்த்தருக்குப் பலியிட வந்ததாகக் கூறும்படி சாமுவேலுக்குத் தேவன் ஆலோசனையளித்தார். 1சாமுவேல் 16:1-3ல் குறிப்பிடப்பட்டுள்ள இச்சம்பவம் பொய் சொல்லும்படியான தேவ ஆலோசனையாக உள்ளதே? **(யமுனா சற்குணன், லண்டன்)**

தேவனுடைய இவ்வறிவுறுத்தல், பொய்சொல்லும்படியான கட்டளை அல்ல. உண்மையில் இது பொய் சொல்வதைத் தவிர்ப்பதற்கான அலோசனையாகவே உள்ளது. சவுல் தன்னைக் கொன்றுபோடுவான் என்று சாமுவேல் பயந்ததினால் மேலதிகமாக இன்னுமொரு வேலையையும் தேவன் சாமுவேலுக்கு கொடுத்தார். அதாவது தாவீதை அபிஷேகிப்பதற்கு உதவிடும் இன்னுமொரு காரியத்தையும் செய்யும்படி தேவன் கூறினார். எனவே, இரு பணிகளைச் செய்வதற்காகச் சாமுவேல் செல்வதனால், இவற்றில் ஒன்றை மட்டும் சொல்லும்போது பொய் சொல்லாமல் இருக்கக்கூடிய நிலையை தேவன் சாமுவேலுக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். நாம் எல்லாவற்றையும் எல்லோரிடமும் சொல்லக் கடமைப்பட்டவர்கள் அல்ல. சில விஷயங்களைச் சிலருக்கு சொல்லாமல் இருப்பது பொய் சொல்வது அல்ல.

© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, November, 2006